Poet Muthulingam on Ilayaraja

MAKKAL KURAL (Independent National Tamil Daily) 8 பக்கம் விலை ரூ.4.00

மக்கள் குரல்

நடுநிலை நாளேடு

RNI No. 24363/1973 TN/PMG/CCR/WPP-675/21-23

(மலர் 48 • சென்னை 5-6-2021 சனி மாலை • வெளியீடு 6-6-2021 ஞாயிறு • இதழ் 271)

Regd. No. TN/CC(S)DN/122/21-23

## தமிழ்நாட்டிலேயே முதன் முறையாக

# பாலாஜி மருத்துவக் கல்லூரி 6 காப்புரிமை பெற்று சாதனை

## நிர்வாக இயக்குனர் நிஷா இளமாறன் தகவல்

சென்னை, ஜூன்.5–

தமிழ்நாட்டில் உள்ள எந்த ஒரு மருத்துவக் கல்லூரியும் செய்யாத சாதனையாக ஸ்ரீ பாலாஜி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை ஆராய்ச்சியாளர்கள் 6 காப்புரிமை பெற்று சாதனை படைத்துள்ளனர். இவர்களை ரேலா மருத்துவமனை சேர்மன் டாக்டர். முகமது ரேலா பாராட்டி கவுரவித்தார்.

பாரத் பல்கலைக்கழகத்தின் அங்கமான ஸ்ரீ பாலாஜி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவ மனை ஆராய்ச்சியாளர்கள் இதுவரை 50 காப்புரிமைக்கு விண்ணப்பித்துள்ளனர். இந்த ஆண்டு இறுதிக்குள் இதன் ஆராய்ச்சி அங்கீகார விண்ணப்பம் 100 –ஐ எட்டும். இதனுடைய 6 புதிய கண்டுபிடிப்புகளுக்கு காப்பீடு உரிமையை பெற்று பல்கலைக்கழகத்தின் மானியத்தையும் பெற்றுள்ளது. மத்திய அரசின் இந்திய காப்பீட்டுக்கழகம் இந்த காப்பீடு அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.




பாலாஜி மருத்துவக் கல்லூரி நிர்வாக இயக்குனர் நிஷா இளமாறன் முயற்சியில் ரேலா மருத்துவமனை சேர்மன் டாக்டர் முகமது ரேலா 6 ஆராய்ச்சியாளர்களை கவுரவித்தார். இந்த கல்லூரியின் டீன் டாக்டர் ஜான்சன், மெடிகல் டைரக்டர் டாக்டர் குணசேகரன், டாக்டர் கே. பிரபு, பதிவாளர் டாக்டர் எஸ். பூமிநாதன், ஆராய்ச்சிப் பிரிவு டைரக்டர் பேராசிரியர் ராமசாமி ஆகியோர் உடன் உள்ளனர்.

இந்த ஆராய்ச்சி காப்பீடு உடல் எலும்பின் அடர்த்தியை கண்டுபிடிக்கும் சாதனம், பாரா இன்ஃப்ளுயன்சா வைரஸ் எதிர்ப்பு மருந்து தயாரிப்பு திட்டம், இறந்தவர் உடலை கெடாமல் பாதுகாக்க எம்பாமிங் செய்ய பயன்படும் திரவம், அருங்காட்சியகங்களில் உள்ள உடல்களை அழுகாமல் காக்கும் பார்மலின் திரவம் அகற்றி, புதிய திரவம் நிரப்புவதற்கு பயன்படும் புது கருவி, பாக்டீரியாக்களை எதிர்க்க உடலுக்கு தேவையான பல்வேறு மருத்துவ கலவைகள் கொண்டு உடலில் படிப்படியாக அவற்றை வெளியிட்டு குணப்படுத்தும் வசதி, புற்றுநோய் எதிர்ப்பு வசதிக்கு நுண் உயிரி முறையில் நானோ பொருட்கள் கண்டுபிடிப்பு ஆகியவற்றிற்காக இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கண்டுபிடிப்புகளையும் தொழில்முறையில் பெரிய அளவில் தயாரிக்க இந்த தொழில்நுட்பத்தை வழங்க ஏற்கனவே பிரபல நிறுவனங்களுடன் மருத்துவக் கல்லூரி பேசி வருகிறது. இந்த லைசென்ஸ் ஒட்டு மொத்தமாக விற்காமல் கூட்டாக இதை மேம்படுத்தி இணையாக விற்பனை வாய்ப்புகளைப் பெறவும் நிர்வாக இயக்குனர் நிஷா இளமாறன் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

### 1,382 ஊழியர்கள்

ஸ்ரீ பாலாஜி மருத்துவக்கல்லூரியில் தனியாக அனைத்து வசதிகளுடன் ஆராய்ச்சிப் பிரிவை ஜெகத்ரட்சகன் நிறுவியுள்ளார். இதில் ஆயிரத்து 382 ஊழியர்கள் பணிபுரிகின்றனர் இதில் 1250 மருத்துவர்கள் எம்டி மற்றும் எம்எஸ் மேல் பட்டப்படிப்பு படித்தவர்கள் ஆவார். இதில் 132 பேர் ஆராய்ச்சி டாக்டர் பட்டம் பெற்றவர்கள் ஆவர்.

இந்த மருத்துவக் கல்லூரியில் தற்போது 40 மேல் பட்டப்படிப்பு மாணவர்களும் 25 பட்டப்படிப்பு மாணவர்களும் ஒவ்வொரு ஆண்டும் ஆராய்ச்சித் திட்டங்களில் ஈடுபடுகின்றனர். இந்த ஆராய்ச்சி திட்டங்களுக்கு இந்த கல்லூரி ஒவ்வொரு ஆண்டும் ரூ. 4 கோடியே 25 லட்சம் அளவுக்கு செலவு செய்கிறது. இதன் ஆராய்ச்சி மூலம் வருமானம் 2019 20 ஆண்டில் ரூ.5 கோடியாக உள்ளது என்று இந்த கல்லூரியின் டீன் டாக்டர் டபுள் யு.எம் .எஸ்.ஜான்சன் தெரிவித்தார்.

### 250 காப்புரிமைகள்

டாக்டர். ஜான்சன் பேசுகையில், ''ஏற்கனவே இந்த கல்லூரி பல்வேறு ஆராய்ச்சி வெளியீடுகள் மூலம் 250 காப்புரிமைகள் பெற்றுள்ளது. இதன் வெற்றிக்கு காரணம். புத்துணர்வுடன் புதுமையை கண்டுபிடிக்கும் நவீன ஆராய்ச்சி வசதிகள் இங்கு உள்ளன. உலக ஆராய்ச்சி கருத்தரங்குகள் நடத்தி இதன் மாணவர்கள் சர்வதேச தரத்தில் கல்வி பயின்று ஆராய்ச்சி செய்ய வழிவகுக்கிறது. இதன் ஆராய்ச்சியாளர்களுக்கு இடைவிடாது நவீன தொழில் நுட்பத்தில் சிக்கனச் செலவில் புதுமை கண்டுபிடிப்புகளை கண்டுபிடிக்க இந்த நிறுவனம் உதவுகிறது. இந்த கண்டுபிடிப்பு சமுதாய நலனுக்கும் மருத்துவ மேம்பாட்டுக்கும் முக்கியமானதாக இருக்க வேண்டும் என்பதில் அக்கறை கொண்டுள்ளோம் என்றார்.

ஸ்ரீ பாலாஜி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை மாணவர்களுக்கு பல்வேறு வாய்ப்புகளை வழங்குகிறது. மாணவர்களே தங்கள் கண்டுபிடிப்புகளை காப்புரிமைப் பெற கூட்டாக விண்ணப்பிக்க வைக்கிறது. இது அவர்களது திறமைக்கு மற்றும் தேர்ந்தெடுக்கும் வேலைக்கு பெரும் ஆதரவாக இருக்கும் என்றார் டாக்டர் ஜான்சன்.

இந்த ஆராய்ச்சியாளர்களுக்கு ஸ்ரீ பாலாஜி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை நிதி உதவி அளித்து எந்தவித பிரச்சினைகளுக்கும் ஆதரவு அளித்து காப்புரிமை யுடன் பல்கலைக்கழக மானியம் பெறவும் அந்த காப்புரிமையைப் புதுப்பிக்கவும் ஆதரவு அளிக்கிறது.

மத்திய அரசின் அங்கீகாரம் பெற்ற காப்புரிமை வழக்கறிஞர் டாக்டர். தீபா போபண்ணா இந்த கல்லூரியின் ஆராய்ச்சியாளர்களுக்கு காப்புரிமை பெற பல்வேறு நடைமுறைகளை செயல்படுத்த வழிகாட்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் டாக்டர். ஜான்சன் தெரிவித்தார்.